# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : CC.No.55/2008 |
| Deposition of witness for Prosecution | : P.w.8 additional witness |
| Name | : முத்துலட்சுமி (ஆய்வாளர்) |
| Father Name/Husband Name | : கருப்பையா |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 24.03.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(1 மற்றும் 2 ம் எதிரிகள் இறந்துவிட்டனர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. 317 குவிமுச மனு கொடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். திரு. பாண்டியன் காவல் ஆய்வாளர் என்பவரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம் என்பதால் குவிமுச பிரிவு 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் வழக்கின் கோப்பினை பார்வையிட்டு ஆவணங்கள் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 30.10.2007 ம் தேதி காலை 09.00 மணியளவில் ஆல்பேட்டை செக்போஸ்ட் பணியில் இருந்த ஆய்வாளர் திரு.செந்தில்குமார் கொடுத்த தனியறிக்கையின் பேரில் குற்ற எண். 877 /2007 ச/பி 4(1)(aaa), 4(1-A), of TNP Act 5,6 of RS rules ன் படி வழக்கு பதிந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **(அந்த தனியறிக்கை மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அதில் ஆல்பேட்டை செக்போஸ்டில் திரு. செந்தில்குமார் ஆய்வாளர், திரு.சுப்ரமணியன் உதவி ஆய்வாளர் தலைமை காவலர், 1715 கருணாகரன் 1674 திரு, கருணாநிதி ஆகியோர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த

போது புதுச்சேரியில் இருந்த கடலூர் நோக்கி சென்ற TN-01-R-8553 மகேந்திரா பெலிரோ கார் -ல் 35 லி சாரயம் பிடிக்க கூடிய 15 சாரய கேன்களிலிருந்த 525 லி சாராயம் மற்றும் TN-07-AX-2836 என்ற எண் கொண்ட Number Plate ஆகியவற்றை மகஜர் சாட்சிகள் 1715 திரு.கருணாகரன் 1674 திரு.கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றி வழக்கின் எதிரிகள் பார்த்திபன், ஆனந்த் ஆகியோரை காவல் நிலையம் அழைத்து வந்து ஆய்வாளர் திரு.பாண்டியன் அவர்கள் கொடுத்ததன் பேரில் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து காலை 09.30 மணியளவில் 1 மற்றும் 2 வது எதிரிகளை காரணம் கூறி கைது செய்து காலை 10.00 மணியளவில் 1 வது எதிரி பார்த்திபன் என்பவரிடம் இருந்து சாட்சிகள் சதாசிவம் மற்றும் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

மேலும் இவ்வழக்கின் வழக்கு சொத்தானது நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு வழக்கு சொத்து எண். 167/2007 ஆக பதியப்பட்டது. (**அந்த Form-95 அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 3 வது எதிரி தலைமறைவாகிவிட்டார். மேலும் அன்றைய தினமே சாரய கேன்களில் இருந்த எடுக்கப்பட்ட மாதிரிகளை இராசாயன பகுப்பாய்விற்காக தலைமை காவலர் பன்னீர் செல்வம் என்பவர் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் காவல் ஆய்வாளர் திரு.செந்தில்குமார், உதவி ஆய்வாளர் திரு. சுப்ரமணி மகஜர் சாட்சிகள் கருணாகரன், கருணாநிதி, ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் சதாசிவம், கண்ணன் மேலும் இவ்வழக்கில் ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததலைமை காவலர் 1090 இராமச்சந்திரன் 1928 இராமதாஸ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

பின்னர் 06.11.2007 தலைமை காவலர் பன்னீர் செல்வம் என்பவர் மூலம் நீதிமன்ற கடிதம் பெற்று இவ்வழக்கில் எடுக்கப்பட்ட மாதிரிகள் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்கப்பட்டது. 07.11.2007 தலைமை காவல் திரு.பன்னீர் செல்வம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 19.01.2008 அன்று 3 வது தலைமறைவு எதிரியை தேடிப்பார்த்ததில் அவர் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் Crl.O.P No. 369/2008 ன் படி முன்பினை பெற்று காவல் ஆய்வாளர் முன் தக்க பினையதாரருடன் சரண் அடைந்தார்.

பின்னர் 21.01.2008 தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்த அறிக்கை பெறப்பட்டது. பின்னர் தடய அறிவியல் அறிக்கை தந்த ஆராய்வாளர் செல்வராணி என்பரை விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது. 05.02.2008 அன்று இவ்வழக்கின் பிரிவுகளான 4(1)(aaa), 4(1-A), of TNP Act 5,6 of RS rules லிருந்து மாற்றம் செய்து 4(1)(aaa), of TNP Act 5,6 of RS rules என பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. **(அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேலும் அன்றைய தினமே எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

ஆல்பேட்டை சோதனை சாவடி கடலூர் - புதுச்சேரி பிரதான போக்குவரத்து சாலை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த காலை 07.00 மணியளவில் போக்குவரத்து மிகுதியாக இருக்கும் என்று சொன்னால் காலை 07.00 மணி என்பதால் போக்குவரத்து குறைவாக காணப்படும். இந்த வழக்கின் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தின் நிறம் குறித்து, சாட்சிகள் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எடுத்து வந்ததாக சொல்லப்படும் கேன்களில் புதுச்சேரி மாநிலத்தின் எந்த அடையாள முத்திரையும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகளை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் வாகனத்தின் உரிமையாளர் பற்றி விசாரித்து வாகனத்தின் உரிமையாளரை இவ்வழக்கின் சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி திரு.பாண்டியன் ஆய்வாளர் என்றால் சரிதான். இந்த வழக்கின் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் யாரையும் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பொதுவாக தனியறிக்கை தாக்கல் செய்யும் போது மேல் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் தான் தாக்கல் செய்யவேண்டும் என்று சொன்னால் எழுத்துப்பூர்வமான உத்தரவு தேவையில்லை. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சாரயம் யாருடைய உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டது என்று ஆவனங்களின் அடிப்படையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் இந்த வழக்கின் தனியறிக்கை தாக்கல்

செய்தவர் காவல் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பருக்கு அனுசரனையாக எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் எதிரிகளிடமிருந்த எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் பெற வில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் 1 மற்றும் 2 எதிரிகளை சொன்னநேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் சம்பவ இடத்தில் தயார் செய்யாமல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்ட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளிடமிருந்த எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றுசொன்னால் சரியல்ல. 3 ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் எந்த சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.